குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், வடக்குத்து ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

தலைமை : திருமதி.K.அஞ்சலை

தீர்மான எண் : 31 நாள் : 30.01.2024

பொருள் : புதிய மனைப்பிரிவு – கடலூர் மாவட்டம் – குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம் – வடக்குத்து ஊராட்சி, வடக்குத்து கிராமம், சர்வே எண்.47/322, 4 ஏக்கர் (அ) 16195.00 ச.மீ. பரப்பளவில் அமைய உள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் – இறுதி அனுமதி வழங்கி உத்திரவிடுதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் செயல்முறை நடைமுறைகள் கோப்பு எண்.ROC No.J5G7DD3V/10540/2023/2023/TCP, நாள் 17.08.2023
2) ஊராட்சி தீர்மான எண். 31 நாள். 30.01.2024
3) அரசாணை எண்.79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD4(3) துறை நாள்.04.05.2017
4) மனுதாரர் திரு.D.ரவிச்சந்திரன் அவர்களின் கடித நாள்.06.09.2023
5) a) கூராய்வு கட்டணம் செலுத்திய ரசீது. Indian Bank Payment Receipt நாள் : 29.12.2023 நில பயன் மாற்றுக்கட்டணம் செலுத்திய ரசீது Indian Bank E-Challan No.20240102007109 நாள் : 02.01.2024.
   b) Indian Bank, நாள்: 29.12.2023 SNA/VP-222679 கட்டணம் செலுத்தியது.

உத்தரவு :

குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், வடக்குத்து ஊராட்சி, வடக்குத்து கிராமம், சர்வே எண்.47/322 - 4 ஏக்கர் (அ) 16195.00 ச.மீ. கொண்ட பெயரிடப்படாத நகரில் உள்ள புதிய குடியிருப்பு மனைப் பிரிவுகளை அங்கீகரித்து தொழில் நுட்ப அனுமதி வழங்கிட பார்வை 4–ல் காணும் கடிதம் வழி தெரிவிக்கப்பட்டது.

வடக்குத்து ஊராட்சி, வடக்குத்து கிராமம், சர்வே எண்.47/322 - 4 ஏக்கர் (அ) 16195.00 ச.மீ. பரப்பளவு கொண்ட மனையிடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு

Scanned with OKEN Scanner

அமைக்க தொழில் நுட்ப ஒப்புதல் கோரி இடம் நேராய்வு செய்து ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

1. மேற்காணும் ஆவணங்களின் அடிப்படையில் வடக்குத்து ஊராட்சியின் தீர்மான எண். 31 நாள் 30.01.2024ன் படி வடக்குத்து கிராம எண்.47/322 4 ஏக்கர் (அ) 16195.00 ச.மீ பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப் பிரிவிற்கு மேற்படி மனைப்பிரிவில் உள்ள மொத்தம் 79 மனைகளுக்கு ஊராட்சி மன்றம் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. வடக்குத்து கிராமத்தில் சர்வே எண்.47/322 – 4 ஏக்கர் (அ) 16195.00 ச.மீ பரப்பளவு கொண்ட பெயரிடப்படாத நகர் என்ற உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவில் உள்ள மனைகளை பார்வை 1ல் காணும் உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு அலுவலகம், கடலூர் அலுவலக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.உ.இ (க.மா) எண்.96/2023 என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை–4ல் சுட்டிய படி சாலை மூலைமுடக்கு மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானப்பத்திர ஆவண எண்.2189/2023, நாள்: 15.06.2023ல் உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைக்கப்பட்டு தானப்பத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பார்வை 3–ல் சுட்டியபடி பார்வை 5–ல் சுட்டியபடி கூராய்வு கட்டணம் மற்றம் நில பயன்மாற்ற கட்டணம் செலுத்தப்பட்டு உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்கண்ட இறுதி ஒப்புதல் ஆணை பிறப்பிக்கப் படுகிறது.

மேற்காணும் ஆவணங்களின் அடிப்படையில் குறிஞ்சிப்பாடி வட்டம், வடக்குத்து கிராமத்தில் சர்வே எண்.47/322 - 4 ஏக்கர் (அ) 16195.00 ச.மீ பரப்பளவு கொண்ட பெயரிடப்படாத மனைப்பிரிவில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், கடலூர் அவர்களால் ம.வ/ந.ஊ.உ.இ(க.மா) எண்.96/2023 குறிப்பிட்டுள்ளவாறு மனைப்பிரிவினை வழிகாட்டி நெறிமுறைகள் பின்பற்றி விற்பனை செய்திட இதன் மூலம் இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

Scanned with OKEN Scanner

மேற்காணும் மனைப்பிரிவுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள ஆவணங்களில் ஏதேனும் குறைபாடோ அல்லது சட்டப் பிரச்சனைகளோ ஏற்படின் இந்த இறுதி ஒப்புதல் ரத்து செய்யப்படுவதோடு உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு:

1) அசல் வரைபடம்
2) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் அவர்களின் செயல்முறை நடைமுறைகள் கோப்பு எண்.ROC No.J5G7DD3V/10540/2023/2023/TCP நாள்.17.08.2023

பெறுதல்

திரு.D.ரவிச்சந்திரன்,
எண்.59, வடக்குதெரு,
அ.கொக்கன்குப்பம், அம்மேரி (அஞ்சல்)
விருத்தாசலம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

தலைவர்
வடக்குத்து ஊராட்சி
குறிஞ்சிப்பாடி ஒன்றியம்

நகல்

1) நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், கடலூர் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்கு அனுப்பப்படுகிறது.
2) வட்டார வளர்ச்சி அலுவலர், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு மேல் நடவடிக்கைக்காக
3) சார்பதிவாளர், வடலூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
4) வட்டாட்சியர், குறிஞ்சிப்பாடி அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner